இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 33 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 25 – திங்கள்கிழமை 11 செப்டம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 33 : Thiruvalluvar Year - 2054 - Aavani 25 - Monday 11 September 2023 - Chennai 16 Pages ₹ 5.00

### அறநிலையத்துறை சார்பில் 1000 ஆவது குடமுழுக்கு விழா: தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி-

# இறை நம்பிக்கையாளர் போற்றும் இணையற்ற ஆட்சி!



புதுடெல்லியில் நடைபெற்ற ஜி–20 உச்சி மாநாட்டினையொட்டி, இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் 9.9.2023 அன்று அளித்த விருந்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டபோது, அமெரிக்க நாட்டின் அதிபர் ஜோ பைடன் அவர்களை சந்தித்து பேசினார். இந்நிகழ்வின்போது பிரதமர் நரேந்திர மோடி, இந்திய குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் – பாராட்டு!

**சென்னை, செப். 11 -**

**சென்னை – மேற்கு மாம்பலம் காசி விசுவநாதர் கோயிலில் கழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை சர்பில் நடைபெற்ற 1000-ஆவது குடமுழுக்கு விழாவையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இரண்டாண்டு கால கழக ஆட்சியில் அறநிலையத் துறை சார்பில் 1000-ஆவது குடமுழுக்கு விழா நிகழ்த்தியிருப்பதின் மூலம் இறை நம்பிக்கையாளர் உள்ளிட்ட அனைவரும் போற்றும் ஆட்சியாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது என பெருமிதத்துடன் குறிப்பிட்டதுடன், இதற்குக் காரணமான இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின்பாராட்டியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப்பதிவு வருமாறு:-

“எல்லார்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது.

குறிப்பாக இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் அனைத்திலும் சிறப்பாக இருக்கின்றன.

**ரூ.5000 கோடி சொத்துகள் மீட்பு!**

5000 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துகளை இரண்டு ஆண்டு காலத்தில் மீட்டது தி.மு.க. அரசு.

இன்றைய நாள்,

1000ஆவது கோயில் குடமுழுக்கு விழாவை மேற்கு மாம்பலம் காசி விசுவநாதர் கோயிலில் நிகழ்த்தியிருக்கிறது இந்து சமய அறநிலையத் துறை.

இறை நம்பிக்கையாளர் அனைவரும்போற்றும்இணையற்ற ஆட்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டுவருகிறது.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபுக்கு பாராட்டு!**

இதற்குக் காரணமான இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களையும் – அதிகாரிகளையும் – அலுவலர்களையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

### இந்திய குடியரசுத் தலைவர் விருந்தில் முதல்வர் பங்கேற்பு!

# ஜி 20 மாநாட்டில் பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்கள் கையெழுத்து!

## அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**புதுடெல்லி, செப். 11 -**

**புதுடெல்லியில் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்ககளுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் நேற்று விருந்து அளித்தார். அவரது அழைப்பின் பேரில் புதடெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த விருந்தில் பங்கேற்றார்.**

**விருந்தின்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து கைகுலுக்கி உரையாடி னார். இந்த மாநாட்டில், இந்தியா – மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான வரலாற்று ஒப்பந்தம் கையெழுத்தானது என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஐரோப்பிய யூனியன், சீனா, இந்தியா, ஜப்பான், சவூதி அரேபியா உள்ளிட்ட 20 நாடுகளை கொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

டெல்லி பாரத் மண்டபத்தில் ஜி20 மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆஸ்திரேலிய பிரதமர் அன்டோனி அல்பானிஸ், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, துருக்கி அதிபர் எர்டோகன், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளுடன் ஜி 20 மாநாடு நடைபெற்றது. ஜி 20 நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு துறைகளில் இந்நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்படுவது, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

**குடியரசுத் தலைவர் விருந்து!**

முன்னதாக ஜி20 மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உலகத் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்தளித்து சிறப்பித்தார். விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க ஒன்றிய அமைச்சர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்து மாநில முதலமைச்சர் களுக்கும் குடியரசுத்தலைவர் அழைப்பு விடுத்திருந்தார். அதனையேற்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தில் கலந்து கொண்டார்.

**அமெரிக்க அதிபருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!**

விருந்தில் பங்கேற்ற அனைத்து தலைவர்களையும், குடியரசுத் தலைவர் முர்மு நேரில் வரவேற்று சிறப்பித்தார். இந்நிலையில், விருந்து நிகழ்ச்சியின்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து கைகுலுக்கி உரையாடினார்.

அப்போது குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, துணை குடியரசுத் தலைவர் ஜெகதீப் தங்கர், பிரதமர் மோடி உள்ளிட்டோர் உடனிருந்தனர். டெல்லி நிகழ்ச்சியை முடித்து கொண்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விமானம் மூலம் நேற்று காலை சென்னை புறப்பட்டார். முன்னதாக தமிழ்நாடு இல்லம் முன்பு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காவல்துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப் பட்டது. இதனை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில், மாநாட்டின் 2ஆம் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானிஸ், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, துருக்கி அதிபர் எர்டோகான், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். இக்கூட்டத்தில், உலகளாவிய பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஜி20 நாடுகளின் தலைவர்கள் விவாதித்து வருகின்றனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், ஜி20 மாநாட்டில் ஆக்கப் பூர்வமான விவாதங்கள் நடைபெற்றன என குறிப்பிட்டுள்ளார்.

**அமெரிக்க அதிபர் ட்விட்டர் பதிவு!**

டெல்லியில் நடைபெற்று வரும் ஜி20 உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியா மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியா – மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான வரலாற்று ஒப்பந்தத்தை அமெரிக்கா, இந்தியா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இறுதி செய்துள்ளது மகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் அதிக தடங்களை ஏற்படுத்துவதுடன், பெரிய அளவிலான முதலீடுகளுக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக டெல்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் ஜி20 நாடுகளின் தலைவர்கள் மரியாதை செலுத்தினர். ராஜ்காட்டுக்கு வருகை தந்த உலக நாடுகளின் தலைவர்கள், அங்கு தேச தந்தை மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். உலக தலைவர்களை பிரதமர் மோடி கதர் சால்வை அணிவித்து வரவேற்றார்.

டெல்லி ஜி20 மாநாட்டின்போது அந்த அமைப்பின் தலைமை பொறுப்பை பிரேசிலிடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார். இதற்கு அடையாளமாக சுத்தியலை பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவிடம் பிரதமர் மோடி வழங்கினார்.

